# 2. வாழ்வாதாரப்பணி என்பது என்ன? வாழ்வாதாரப்பணிக்கல்வி என்பது என்ன?

## 2.1 வாழ்வாதாரப்பணியின் தோற்றம்

அநேகமாக அனைத்துப் பண்பாடுகளிலும் வேலையும், வாழ்வாதாரப்பணியும் மானுட வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்தேயுள்ளது, வேலையின் பரிணாமத் தோற்றமென்பது, சமூகம், பண்பாடு மற்றும் பொருளாதாரத்தைச் சார்ந்த சக்திகளின் கூட்டிணைப்பின் பல்வேறு வகைப்பட்ட விளைவானது. பல நாகரிகங்களிலும், தொழில் மற்றும் வணிகம் குடும்பங்களாலேயே நடத்தப்பட்டுவந்தன. தொழில்சார் திறமைகள், இளைஞர்களிடம் குடும்பத்தினருக்குள்ளாகவே மூத்தவர்களால் கடத்தப்பட்டன அல்லது அதற்கான அலுவல் அமைப்புகளால் வளர்க்கப்பட்டன. ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் தொழிற்புரட்சி, முழுவேகத்தில் திரண்ட காலத்தில்தான் வாழ்வாதாரப்பணிசார் உளவியலின் தொடக்க வடிவம் முகிழ்த்தது. அப்போதைய கவனம், மானுடத் தனிப்பண்புக்கூறு மற்றும் சிறப்பியல்புகளையும் அடையாளம் கண்டு அதற்குப் பொருந்துகிற வேலையில் சேர்த்துக்கொள்ள இயலுகிற அளவில் வளர்ந்துகொண்டிருந்த அமைப்பு முறைகளின் மீது இருந்தது. முன்னர், வேலைப் பிரிவினை மற்றும் ஒதுக்கீடுகளை சமூகத்தின் பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் கொண்டிருந்த காலத்தில் இதுபோன்ற ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான தேவைகள் இல்லாமலிருந்திருக்கலாம். இன்று சில குறிப்பிட்ட பண்பாடு மற்றும் பொருளாதாரங்களில் வாழ்வாதாரப்பணி தேடுவோரின் விருப்பத்தேர்வுக்குப் பொருத்தமாக எண்ணற்ற தொழில் வாய்ப்புகள் பரந்து விரிந்த அளவில் கிடைக்கின்றன. இப்பண்பாடுகளில் அநேகமாக எல்லாரும் அவரவர் விருப்பத்திற்கேற்ப வாழ்வாதாரப்பணிகளை தேர்ந்தெடுக்கவும், தேர்ந்தெடுத்த வாழ்வாதாரப்பணிகளில் தொடரவும் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தோன்றிய இத்துறை பல்துறை ஆதரவில் விரைந்து முன்னேறி வளர்ச்சியைப் பெற்றுள்ளதோடு, பணி உலகில் மக்களின் ஈடுபாட்டை உறுதிப்படுத்தியுள்ளது.

**கடந்த காலத்தில், வேலைப் பிரிவினை என்பது சமூகப் பண்பாட்டு வழக்கங்களை அடிப்படையாகக்கொண்டிருந்த போது வேண்டுமானால், தொழிற்பணி வழிகாட்டல் தேவைப்படாதிருந்திருக்கலாம்.**

இன்றைய நிலையில் கவனம்கொள்ளத்தக்க ஒரு கருத்து என்னவெனில் வாழ்வாதாரப்பணி, மேற்குலகின் தொழில்மயப்போக்கு மற்றும் அப்போக்குக்கே உரிய தனித்த, வலிமைவாய்ந்த, சமூக மற்றும் பொருளாதார உருமாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில், வேலையின் முக்கிய ஒரு பண்பாகவே தோற்றமளித்தது. இப்பண்பாடுகள் தனிநபருக்கு, அவர் அல்லது அவளது எண்ணங்கள், விருப்பார்வங்கள் மற்றும் கனவுகளைப் பின்தொடர்வதற்கான முழு சுதந்திரத்தை அளிக்கின்றன. சுய முடிவெடுப்பதற்கான தனிநபர் சுதந்திரமென்பது, பல்லாண்டுகளாக வேர்விட்டுள்ள, மிகுதியும் மதிக்கப்படுவதும் பாதுகாக்காக்கப்படுவதுமான ஒரு விழுமியமாகும்.

அப்படியான விழுமியங்கள் நேரடியாகச் செல்வாக்குப் பெறாத, பண்பாடு மற்றும் பொருளாதாரங்களில், வேலையுடனான மானுடத்தொடர்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையிலேயே தொடர்கிறது. உலகத் தொழிற்திறனின் பெரும்பகுதி, வேகவேகமாக வளர்வதாகக் கூறப்படும் பொருளாதாரங்களிலுங்கூட, இப்போதும் தொழிற்புரட்சிக்கு முந்தைய பண்புகளையே கொண்டிருப்பதுடன், மேலே சித்தரித்துக் காண்பிக்கப்பட்ட வாழ்வாதாரப்பணி, அந்தப் பண்பாடு மற்றும் பொருளாதாரங்களிலும் காணப்படவில்லை. வழக்கமாக, அமைப்புரீதியாகக் கூட்டாண்மைப் பண்புசார்ந்த இத்தகைய பண்பாடுகளில், விருப்பங்கள் சுய
சார்ந்தவற்றைவிடப் பிற தனிநபரிடம் காரணிகளே ஈடுபாட்டினை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துகின்றன. அதே நேரத்தில், மேல்நாட்டு நாகரீகப்பாங்கின் தாக்கம் மற்றும் அண்மைக்காலத்திய நவீனமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் ஆகியவற்றின் தாக்கத்தினால், கருத்தளவில் நிலவிய தனிநபர் வாழ்வாதாரப்பணி, தற்போது உலகின் பல பகுதிகளிலும் மெய்மைநிலைக்கு வந்துவிட்டது. எனவே, வரலாற்றடிப்படையில் வாழ்வாதாரப்பணி எனும் கருத்து மேற்குலகு சார்ந்த, தனிநபர் மற்றும் தொழில்மயத்தில் வேர்கொண்டதெனினும் தேர்வு செய்யும் சுதந்திரத்தை உயர்த்திப்பிடிக்கும் தொழில்சார் அறப்பண்பினால் பேணி வளர்க்கப்பட்டதும் உலகளவில் இயங்கும் சக்திகளால் பல்லாண்டுகளாகப் பல பண்பாடு மற்றும் பொருளாதார மையங்களுக்குக் கடத்தப்பட்டதுமாகும்.

**வாழ்வாதாரப்பணிக்கல்விப் பயிற்சித்திட்டமொன்று பயனுள்ளதாகச் செயல்பட,உளவியல், பண்பாட்டுப் பொருளாதாரக வேலை கூறுகளை அவற்றின் உள்ளூர் நிலைமைகளை அனுசரித்துப் புரிந்துகொள்வதோடு, அவற்றைத் திட்டத்திற்குள் உள்ளிழுத்துக்கொள்ளவும் வேண்டும்.**

ஆனால், வாழ்வாதாரப்பணிசார்க் கல்விப் பயிற்சித்திட்டம் ஒன்று பயனுள்ளதாகச் செயல்பட, உளவியல், பண்பாடு மற்றும் பொருளாதாரக் கூறுகளை அவற்றின் உள்ளூர் நிலைமைகளை அனுசரித்துப் புரிந்துகொள்வதோடு, அவற்றைத் திட்டத்திற்குள் உள்ளிழுத்துக்கொள்ளவும் வேண்டும்.

## 2.2 வாழ்வாதாரப்பணிசார்க் கல்வி மற்றும் வழிகாட்டலில் ஜீவா அணுகுமுறை

ஜீவா வாழ்வாதாரப்பணிக்கல்வி அமைப்புமுறை `ப்ராமிஸ் பவுண்டேசன்` என்னும் அமைப்பினால் விரிவான ஆய்வு மற்றும் கலந்தாய்வு மூலம் இந்தியாவுக்கென உருவாக்கப்பட்டது. 'ஜீவன்' என்பது அநேகமாக அனைத்து இந்திய மொழிகளிலும் உயிர் எனப் பொருள்படுகிறது. ஜீவா அணுகுமுறை, வேலை மற்றும் தொழிலினை தனிநபரின் வாழ்க்கையோடு முழுமையாக ஒருங்கிணைந்த, அதாவது தனிமனிதனின் வாழ்க்கையிலிருந்தும் பிரிக்கமுடியாத ஒன்றெனக் கருதுகிறது. வேலையினை வெறுமனே செய்து முடிக்கவேண்டிய ஒரு பணி அல்லது ஈட்டவேண்டிய ஒரு வாழ்வாதாரமென மட்டுமே கருதப்படவில்லை. அது மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட பண்பாட்டு நடைமுறைகளால் வழிகாட்டப்படும் தனிநபர் வாழ்க்கையின் நீட்சி என உணர்த்தப்படுகிறது.

இக் கையேட்டின் மீதம் உள்ளப்பகுதி முழுவதும் வாழ்வாதாரப்பணிக் கல்வித்திட்டம் மற்றும் வழிகாட்டல் அடிப்படையிலானது.

## 2.3 வாழ்வாதாரப்பணியின் பண்புகள்

வாழ்வாதாரப்பணிக்கெனத் தனித்து விளங்கும் சிறப்பியல்புகள், அதனை தனித்ததொரு வகையிலான வேலையாக மாற்றுகின்றன.

### 2.3.1 ஒரு தேர்வினை மேற்கொள்ளுதல் மற்றும் விருப்புறுதியைச் செயல்படுத்தல்.

எதனைத் தேர்வுசெய்வதென்ற வினாவுடன், முடிவெடுப்பது மற்றும் விருப்புறுதியைச் செயல்படுத்துவதினையும் வாழ்வாதாரப்பணி, கொண்டுவருகிறது. எண்ணற்ற வாய்ப்புகள் முன்வைக்கப்படும் நிலையில், வாழ்வாதாரப்பணியினைத் தேர்ந்தெடுப்பவர், பல்வேறு சாத்தியக்கூறுகள் மத்தியில் அவர்/அவள் தொடர்ந்து மேற்கொள்ள விரும்புகின்ற வாழ்வாதாரப்பணி ஒன்றினை அடையாளம் கண்டு, அதனைத் தேர்வுசெய்யவேண்டியிருக்கிறது. இப்பணிதான் எனத் தேர்ந்தெடுத்துவிட்டபின், அந்த வாழ்வாதாரப்பணிக்கு இட்டுச் செல்லுகின்ற பாதையினை அத்தனிநபர் அடையாளம் கண்டு, அதனைத் தெரிவு செய்யவேண்டியிருக்கிறது. முடிவெடுப்பது என்பது, பணி உலகத்தினுள் நுழைவதற்கானத் தொடக்கநிலையிலேயே, தனிநபர் எதிர்கொள்கிற சந்திமுனைகளோடு முடிந்து போவது இல்லை. வாழ்வாதாரப்பணியின் பாதை நேரடியாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போய் விடுவதாக இல்லை. வாழ்வாதாரப்பணிசார் வழிகாட்டல் பயிலரங்கு ஒன்றில் பயிற்சி பெற்றுவிட்டதுமே அடைந்துவிடுகிற மாதிரியான ஒரேவகை இலக்குகளைக் கொண்டதல்ல வாழ்வாதாரப்பணிசார் குறிக்கோள்கள். வாய்ப்புகள் பறிபோகவும், தோல்வியை எதிர்கொள்ளவும், மொத்தச் சூழ்நிலையுமே மாறிப்போகவும் நேரிடலாம். வாழ்வாதாரப்பணிப்பாதை திருப்பங்களும், எதிர்த்திருப்பங்களும் நிறைந்ததாகப் பலநேரங்களில் புதிய இக்கட்டுகளில் கொண்டுவந்து நிறுத்திவிடுவதாக இருக்கிறது. ஒரு இலக்கினை எய்திவிட்ட நிலையில் புதிய வாழ்வாதாரப்பணிசார் குறிக்கோள்கள் தோன்றுகின்றன. அவர்/அவளது வாழ்வாதாரப்பணி வாழ்க்கை முழுவதிலுமே, அத்தனிநபர் முடிவுகள் எடுப்பது மற்றும் திட்டமிட்ட தேர்வுகள் மற்றும் தெரிவுகளை மேற்கொள்வது தேவையாகிவிடுகிறது. நல்லதொரு வாழ்வாதாரப்பணிக்கல்விப் பயிற்சித் திட்டம், இளைஞர்களை வாழ்க்கை முழுவதிலுமாகச் சிறப்பான

**வாய்ப்புகள் பறிபோகவும், தோல்வியை எதிர்கொள்ளவும், மொத்தச் சூழ்நிலையுமே மாறிப்போகவும் நேரிடலாம். நல்லதொரு வாழ்வாதாரப்பணிசார் கல்விப் பயிற்சித் திட்டமெனில் இளைஞர்களை வாழ்க்கை முழுவதிலுமாகச் சிறப்பான முடிவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.**

முடிவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

### 2.3.2 பொருத்தப்பாடு

ஒரு வாழ்வாதாரப்பணி என்பது குறிப்பான ஒரு தனித்தேர்ச்சித் திறனைச் சுட்டுகிறது. தனித்தேர்ச்சித் திறனோ, குறிப்பிட்ட சில வேலைத் திறன்களுக்குப் பொருத்தமான தகுதி பெற்றிருப்பதைக் கோருகிறது. வாழ்வாதாரப்பணி ஒன்றுக்கான தனிநபர்ப் பொருத்தப்பாட்டினைக் கண்டறிய, அத் தனிநபரின் சொந்த விருப்பார்வங்கள், திறமைகள் மற்றும் விருப்பச் சாய்வுகளை அடையாளங்காணுவது தேவையாகிறது. பொருத்தப்பாடு குறித்த கேள்வி, வாழ்வாதாரப்பணிக்காலம் முழுவதிலுமே தொடர்கிறது. வாழ்வாதாரப்பணி ஒன்றுக்குள் சேர்த்துக் கொள்ளப்படும் கணத்தில் விரிவான பரிசீலனைக்கு உட்படுத்தப் படுகின்ற தனியொரு கோட்பாடாக பொருத்தப்பாடு விளங்குகிறது. வாழ்வாதாரப்பணிக்கு முயற்சிப்பவர், அவர்/அவள் விஞ்சிச் செயலாற்றுகிற, அப்படிப் பணியாற்றுவதில் மிகவும் மேலதிக மகிழ்ச்சியோடிருப்பதாக உணருகின்ற ஒரு வாழ்வாதாரப்பணியைக் கண்டடைவது மிகவும் அவசியமானது. வாழ்வாதாரப்பணி ஒன்றில் சேர்ந்த பின்னரும், அவ்வாழ்வாதாரப்பணி நெருக்கடிகளுக்கு ஈடுகொடுக்கத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளுதல் என்பது வாழ்வாதாரப்பணி தேடுவோர் எதிர்கொள்ளுகின்ற சிக்கலாகவே உள்ளது. வாழ்வாதாரப்பணியில் முன்னேறுவதற்கு, புதிய நெருக்கடிகளுக்கு ஈடுகொடுக்கத் தனது அடிப்படை பொருத்தப்பாட்டினைக் கூர்மைப்படுத்திக்கொள்ள, மேற்கொண்டும் பயிற்சி தேவைப்படுகிறது. தேர்வுசெய்துகொண்ட வாழ்வாதாரப்பணிக்குத் தேவைப்படும் அனைத்துத் தகுதிகளையும் முழுமையாகக் கொண்டவராக எந்தத் தனிநபரும் இருப்பதில்லை. வாழ்வாதாரப்பணியில் வெற்றிபெறுவதற்கு இணக்கங்களை ஏற்படுத்திக்கொள்வதும் புதிதாக எழுந்துவரும் வாழ்வாதாரப்பணித் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக் கற்றுக்கொள்வதும் தேவையாகிறது.

**தேர்வுசெய்துகொண்ட வாழ்வாதாரப் பணிக்குத் தேவைப்படும் அனைத்துத் தகுதிகளையும் முழுமையாகக் கொண்டவராக எந்தத் தனிநபரும் இருப்பதில்லை. வாழ்வாதாரப் பணியில் வெற்றிபெறுவதற்கு இணக்கங்களை ஏற்படுத்திக்கொள்வதும், புதிதாக எழுந்துவரும் வாழ்வாதாரப்பணித் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக் கற்றுக்கொள்வதும் தேவையாகிறது.**

### 2.3.3 முன் தயாரிப்பு

நவீன வாழ்வாதாரப்பணியின் முக்கியமான ஒரு பண்பாக வாழ்வாதாரப்பணியில் சேருவதற்கான முன் தயாரிப்பு விளங்குகிறது. வாழ்வாதாரப்பணிக்கான முன் தயாரிப்பு, ஆய்வுக்கான இரு கருத்துக்களை முன்வைக்கிறது. ஒரு நிலையில், தேர்வுசெய்கிற வாழ்வாதாரப்பணியின் தேவைகளை ஈடுசெய்ய முன்தயாரிப்பில் ஆராய்வு, பயிற்சி மற்றும் திறன்மேம்பாடு ஆகியனவும் அடங்கும். போதிய பயிற்சியின்மை அல்லது குறைமட்ட அறிவுத்தளம், ஒப்புக்கொள்ளப் போகிற வேலையின் வகைப்பாட்டில் கவனம் குவிக்காமல் சமரசம் கொள்ளச் செய்கிறது. இன்னொரு நிலையில், வாழ்வாதாரப்பணிசார் முன்தயாரிப்பு, ஒருவர் தன்னைப்பற்றியும் வாழ்வாதாரப்பணி குறித்தும் கொண்டுள்ள மனப்பான்மை நோக்கோடு தொடர்புடையதாகிறது. எடுத்துக்காட்டாக, வாழ்வாதாரப்பணியின் தேவைத் தகுதிகளுக்கேற்பத் தன்னை வடிவமைத்துக்கொள்ளும் விருப்பக்குறைவு கடுமையான சிக்கலை ஏற்படுத்தும். பணி உலகில் உயிர்த்திருக்கவும், முன்னேறுவதற்குமான உடனடி விரைவோட்ட மனநிலையினை வளர்த்துக்கொள்வதும் வாழ்வாதாரப்பணிசார் முன்தயாரிப்பின் தேவையாகிறது.

### 2.3.4. வளரும் புதிய மாற்றங்கள்

வாழ்வாதாரப்பணி மேம்பாடு என்பது வாழ்க்கை முழுவதற்குமான ஒரு செயல்பாடு. அதில் வெற்றிபெறுவதற்கு, தனிநபர் அதற்காகவே வரையறுக்கப்பட்டுள்ள அமைப்பு முறைமைக்குள் தன்னைப் பொருத்திக்கொள்ளக் கற்பதுடன் அதற்கெனவே இருக்கிற விதிகளைப் பின்பற்றுகிற அதே நேரத்தில் விஞ்சும் செயல்திறமை, ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கத் தொடக்க முயற்சியினை வெளிக்காட்டவும் வேண்டும். வாழ்வாதாரப்பணி, அதன் இயற்கைப்பண்பின் தன்மையாலேயே, அதன் சிறப்பு தனித்துவத் தேவையில் உயர்நிலைப்பதவிகளுக்குச் செல்லுகின்ற, மென்மேலும் முன்னேறுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதாக உள்ளது. பதவி உயர்வுகள், வேறு நிறுவனங்களுக்கு மாறுதல், சிறப்பு தனித்துவப்பணிகளுக்கு தாவுதல் போன்றவை அனைத்தும் நிகழ்நிலை வாழ்வாதாரப்பணிசார் புதிய வளர்ச்சிக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

### 2.3.5. சமூக - தனிநபர் பரிமாணங்கள்.

வெற்றிகரமான வாழ்வாதாரப்பணிசார் மேம்பாடு என்பது சிக்கலான உளவியல் மற்றும் சமூகச் செயல்பாட்டின் விளைவாக நிகழ்கிறது. ஒரு மக்கள் குழு (விரிவான பார்வையில் சமூகம்) விரிந்து பரந்த பல்வேறு தேவைகளைக் கவனத்தைக் கவருகின்ற வகையில் முன்வைக்கிறது. அத்தேவைகளில் ஒன்றினை அல்லது அதன் சிறப்பு உள்ளுறுப்பு ஒன்றினை ஈடுசெய்கிற அளவில் அந்தப் பரந்த குழுவுக்குட்பட்ட தனிநபர்கள் அலுவல் முறையில் அதற்குத் தேவையான திறமைகளை வளர்த்துக்கொள்கின்றனர். வாழ்வாதாரப்பணி என்பது, சமூகம், அதன் நலத்திற்காகவும், முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டுக்காகவும் அதன் உறுப்பினர்களின் சேவையைப் பயன்கொள்ளுகிற ஒரு இயங்குமுறையாக உள்ளது. தனிநபர்களிடமிருந்து குறிப்பிட்ட ஒரு சேவையைப் பெற்றுக்கொண்டதற்கு ஈடாக, விரிந்த சமூகம், ஈட்டுத்தொகை வழங்குகிறது. அதனால் ஒரு தனிநபரின் வாழ்வாதாரப்பணி, அவரது தனிப்பட்ட நலன்கள் மற்றும் அவர்/அவள் சமூகத்திற்கு அளிக்க நினைப்பதற்கிடையிலான வினை மற்றும் எதிர்வினைகளின் அடிப்படையிலமைகிறது. நுண்மையான இச்சமநிலையில் சிறிது இடையீடு ஏற்பட்டாலும் வாழ்வாதாரப்பணிசார்

**வாழ்வாதாரப்பணி என்பது, சமூகம், அதன் நலத்திற்காகவும், முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டுக்காகவும் அதன் உறுப்பினர்களின் சேவையைப் பயன்கொள்ளுகிற ஒரு இயங்குமுறையாகும். தனிநபரின் வாழ்வாதாரப்பணி என்பது அவரது தனிப்பட்ட நலன்கள் மற்றும் அவர்/அவள் சமூகத்திற்குப் பங்களிக்கும் விருப்பத்திற்கிடையிலான வினை மற்றும் எதிர்வினைகளாகும்.**

வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் சிலநேரங்களில் அப்படியே தடைப்பட்டு நின்றுங்கூடவிடுகிறது. வாழ்வாதாரப்பணித் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் அளவிற்குத் தனிநபர் தனது ஆற்றலைச் செலவிட மனமுவந்து முன்வந்தால், அந்த முயற்சி முதலீடு ஏதோ சில வகைகளில் தனிப்பட்ட பயன்களை அளிப்பதேயாகும். ஒரு நிலையில், அப்பயன் உயர்ந்த ஊதியம் மற்றும் பொருள்நலன்களாக இருக்கலாம். மற்றொரு நிலையில், ஒருவர் மேற்கொள்கிற வாழ்வாதாரப்பணி மற்றும் அவ்வாழ்வாதாரப்பணியில் அவர் பதித்துள்ள வாழ்வாதாரப்பணிசார் முன்னேற்றம், சமூகத் தகுநிலை மற்றும் பெருமிதப் பண்போடு மிக நெருக்கமான இணைப்பினைக் கொண்டுள்ளது. இன்னும் ஆழமாக கவனம் செலுத்தினால், வாழ்வாதாரப்பணியானது, தனிநபரின் சுய உள்ளாற்றல், கனவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் எல்லாவற்றுக்கும் மேம்பட்ட நிலையில் சுயத்தை மெய்ப்பிப்பதற்கும் வழிவகுக்கின்ற ஒரு இயங்குமுறையாக அமைகிறது.

## 2.4 வாழ்வாதாரப்பணி மற்றும் வாழ்வாதாரப்பணிசார் கல்வி

### 2.4.1. ‘வாழ்வாதாரப்பணி’ என்பது என்ன?

கீழே படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வாழ்வாதாரப்பணியினை, வாழ்க்கைக்கான வழிவகை என்று மட்டுமில்லாமல், சுய உள்ளாற்றல்களை மெய்ப்பிப்பதற்காக, ஆற்றல் மற்றும் சிறப்பு வகைப்பட்ட முயற்சியின் சுயாதீன திசையின் செயல்பாடு மற்றும் வாழ்வாதாரப்பணித்துறையில் குறிப்பிட்ட புலத்தில் சிறப்பு வகைப்பட்ட

**வாழ்வாதரப்பணியின் ஐந்து முக்கியப் பண்புகளை உங்கள் சொந்தச் சொற்களில் எழுதுக.**

வல்லமைக்கான முயற்சியின் வாயிலாக சமூகத் தேவைகளுக்கான பங்கினை அளித்தல் என விவரிக்கிறது. வாழ்வாதாரப்பணி மற்றும் அதில் முன்னேற்றம் குறித்த இந்த விவரிப்பு கருத்தளவிலான ஒரு விவரிப்பு என்பதை உள்ளத்தில் கொள்ளவேண்டும். உண்மை நடைமுறையில், இந்த வழிமுறைச் செயல்பாடு முகிழ்த்தெழ இணக்கமாகவும், அதனைக் குலைக்கவும், திசைமாற்றவுமாக எண்ணற்ற விசைகள் அவற்றுக்கான ஒரு ஒழுங்கில் வினையாற்றுகின்றன. வாழ்வாதாரப்பணி தனி ஒருவருக்குள் திடீரென வெடித்துக் கிளம்பிவிடுவதில்லை. வேலை மீதும், அதன் பின்னர் வாழ்வாதாரப்பணி மீதும் தனிநபருக்கு ஏற்படுகின்ற ஈடுபாடென்பது காலப்போக்கில் ஒருவருக்குள் திரண்டெழுகின்ற ஒன்றாகவே இருக்கிறது.

## வாழ்வாதாரப்பணி என்பது என்ன?

- ஆற்றல் மற்றும் சுயாதீன திசையின் செயல்பாடு
- சிறப்பு வகைப்பட்ட முயற்சி
- பணித்துறையில் குறிப்பிட்ட ஒரு புலம்
- சமூகத் தேவைகளுக்கு ஈடுகொடுத்தல்

**கொடுத்தல்**

- வளவாழ்வுக்கான வழிவகை
- சமூக அடையாளத்துக்கான அடிப்படை
- சுய உள்ளாற்றல் மெய்ப்பிப்பதற்கான வழி

**பெறுதல்**

## வழிமுறைகள்: தொடர்புடைய தற்போதய நிலை

மேற்கத்திய சூழலில், வாழ்வாதாரப்பணிசார் உளவியல் துறையின் முன்னேற்றம் தீவிரம் ஆனதினால், அது பல்வேறு கோட்பாடுகள் மற்றும் அணுகுமுறைகளின் உருவாக்கங்களுக்கு வழிவகுத்துள்ளது. தனிநபர் மீது 'பிறர்' தாக்கம் மற்றும் 'குழு' தாக்கம் குறித்துக் கணக்கில்கொள்வதில்லையென்பது இக்கோட்பாடுகளின் போதாமைகளில் ஒன்று. அதுபோன்ற கோட்பாட்டு விவரிப்புகள், அன்றாட வாழ்க்கை முறைகளுடன் முழுமையாகவும் ஒருங்கிணைந்ததாகவும் அமைகின்ற, மானுடப்பணி ஈடுபாட்டுச் செயல்வடிவங்களிலிருந்தும் தூரமாகவே நகர்ந்துசென்றுவிடுகின்றன. இத்தகைய சூழல்களில் வாழ்க்கையும் வாழ்வாதாரப்பணியும் மிகமிக நெருக்கமாக ஒன்றிவிடுகின்றன. இன்றளவிலுங்கூட, தொழில்மயத்துக்கு முந்தைய பண்புகளோடு விளங்குகின்ற பணி உலகத்துக்குள் நுழைய வேண்டுமெனில், அனைவருமே வளரும் நாடுகளின் நகருக்கு வெளியே சில மைல் தூரங்களாவது தள்ளிச்செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே வேலையானது சமூகத்தின் பரந்த வாழ்க்கையோடு இயற்கையாகவே இணைந்ததாக அமைந்துள்ளது.

வாழ்வாதாரப்பணி பற்றிய சிந்தனை மிகப்பரந்த அளவில் பெருகி வளரும் சூழலில், அதன் வெளிப்பாட்டின் தன்மை, அது உணர்த்தும் பொருள் மற்றும் தனிநபர்கள், குழுக்கள் வாழ்வாதாரப்பணியில் கொள்ளும் ஈடுபாடு, சூழலுக்குச் சூழல் வேறுபடுமென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஒரு குழுவினருக்கு, வாழ்வாதாரப்பணி வழிகாட்டலின் கவனம், தனிநபர் அவர்/அவள் சிறப்பு வல்லமை பெறவேண்டிய தொழிற்புலத்தினை (எ.கா. வணிகம் சார்ந்த கலை, உயிரித்தொழில்நுட்பம் அல்லது சட்டம்) அத்தனிநபரே அடையாளம் காண உதவுவதாக இருக்கலாம். மற்றொரு அமைப்பில், வாழ்வாதாரப்பணிசார் வழிகாட்டல், ஒரு சமூகத்தின் உறுப்பினர்களுக்கு, அவர்களது பாரம்பரிய, கிராமப்புறத் தொழில்களை இன்னும் சிறப்பாகச் சாத்தியப்படுகின்ற முறையில் செய்வதற்கான நவீன திறமைகளை அடையாளம் காண உதவுவதாக அமையும்.

இத்தகைய போக்குகள், மேலெழுகின்ற மற்றும் பொருளாதார ரீதியாக வளரும் நாடுகளில் குறிப்பிடத்தக்கனவாகின்றன. இவ்வகையான ஒழுகலாற்று வடிவங்களைத் வாழ்வாதாரப்பணி வழிகாட்டல் வல்லுநர், வாழ்வாதாரப்பணிச்சேவைகளைப் புரியும்போது, கவனத்தில் கொள்ளவேண்டும். நமது இறுதி நோக்கம், தனிநபர் ஒரு `நல்ல பணி` யினைப் பெற மட்டுமே, உதவுவதோடு வெறுமனே நின்றுவிடுவதல்ல; அவர்/அவள் தனிப்பட்ட முறையிலும், அவர்கள் அடங்கியுள்ள குழுவாகவும் வளம்பெறுகின்ற வகையில் சுய உள்ளாற்றல்களை முழு வெளிப்பாட்டுநிலைக்கு வளர்த்துக்கொள்ளவும் உதவுவதாகும்.

**சிந்தனைக்களம்!**

**வாழ்வாதாரப்பணி என்பதற்கான உங்கள் வரையறை என்ன?**

**வாழ்வாதாரப்பணிசார்க் கல்வி என்பதற்கான உங்கள் வரையறை என்ன?**

## 2.5. வாழ்வாதாரப்பணியினைக் கண்டுபிடிக்கும் பாதை

வாழ்வாதாரப்பணி வழிகாட்டலுக்குப் பல அணுகுமுறைகள் உள்ளன. ஆனால், பரந்து விரிந்த அளவில், முழுமையான அனைத்தையும் உள்ளடக்கிய வாழ்வாதாரப்பணி வழிகாட்டல் ஒன்றோடொன்று பிணைந்த நான்கு உட்கூறுகள் கொண்டது. வாழ்வாதாரப்பணிக் கல்வியின் இந்த அடிக்கருத்துக்களை ஒன்றாகச் சேர்த்து கீழே உள்ள படத்தில் காட்டியுள்ளவாறு வாழ்வாதாரப்பணியினைக் கண்டுபிடிக்கும் பாதை என அமைகிறது.




இந்த கையேட்டின் மீதிப்பகுதி இந்த உட்கூறுகள் ஒவ்வொன்றினையும், இந்த உட்கூறுகளை அளிப்பதற்கான பயிலரங்கு செயல்களையும் முன்வைக்கிறது.

## வகுப்பீடு

**இந்த அலகு பற்றிய உங்கள் சுய கற்றலை முடிப்பதற்கான இறுதி படி ஒரு எளிய வகுப்பீட்டை சமர்ப்பிப்பதாகும்.**

- **கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்க. நீங்கள் வகுப்பீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்**
- **வகுப்பீட்டின் முடிவில் Submit பொத்தானைக் கிளிக் செய்க. உங்கள் பதில்கள் தானாக எங்களுக்கு வந்துசேரும்**
- **அடுத்த அலகுக்குச் செல்லவும்.**
- **நீங்கள் எங்களிடமிருந்து மதிப்பீட்டைப் பெறுவீர்கள்**

**Link:** https://forms.gle/qMt9nDLZcLk6rwjb8

**முக்கியம்:** நீங்கள் 7 வகுப்பீடுகள் அனைத்தையும் நேருக்கு நேர் மெய்நிகர் பயிற்சிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.